மில்க்வைற் செய்தி
Milk White News


தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஐப்பசி 1982 ★ இதழ் - 82

# பனையன்பர் வந்திருக்கிறார்



கிராமோதயம், தேசோதயம், சர்வோதயம் முதலிய எழுச்சிகளில் நடைமுறை அநுபவமிக்க மகாத்மா காந்தியடிகள், விநோபாஜி, குமரப்பா முதலாய பெரியவர்களின் வழிவந்த தொண்டர்கள் கண்ட குடிசைக் கைத் தொழில், காதி முதலிய வற்றில் தோய்ந்து ஊறி உலகப் புகழ்பெற்ற தொண்டர் ஒருவர், ஐந்து கோடி பனைக்குலத்துக்கு முடிசூடா மன்னன், பனைத் தொண்டர், பனையன்பர்.



தமிழ் நாட்டுப் பனைத் தொழில் நிபுணர் பனையன்பர் சம்பந்தம் அவர்களை மில்க்வைற் தொழிலதிபர் தம்மனையில் வரவேற்று உபசரித்தார்.

பனையன்பர் சம்பந்தம் அவர்களைப்பற்றியும் குமரப்பாபுரத்துப் பல்வேறு பனைத்தொழிலபிவிருத்திகளைப் பற்றியும் மில்க்வைற் செய்தி வாசகர்கள் பலமுறை வாசித்த அநுபவமுள்ளவராவர்.

பனையன்பர் சம்பந்தம் அவர்களுக்கும் எங்கள் நாட்டுப் பனையன்பர் பூலோக கற்பகதரு நாயகர் மில்க்வைற் தொழிலதிபருக்கும் நீண்டகாலத் தொடர்புச் சம்பந்தம் உண்டு.

பனையைப்பற்றி வேர் முதல் வட்டு வரையும், பீலி முதல் காவோலை வரையும், தும்பு முதல் நார் வரையும் பாளை முதல் கல்லக்காரம் வரையும் காந்திப் பக்தரான சம்பந்தம் அவர்கள் நன்கறிவர். காந்திப் பக்தரான சம்பந்தம் அவர்கள் தேனீக்களைக் கொல்லாமல் தேனெடுக்கப் பழகியவர்.

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

**மகாத்மா காந்தியடிகள் நினைவுச் சிறப்பிதழ்**

உ
சிவமயம்






### திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

திருவதிகை வீரட்டானம்

திருவடித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அரவணையான் சிந்தித் தரற்றும்மடி
அருமறையான் சென்னிக் கணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி
சார்ந்தார்கட் கெல்லாம் சரணுமடி
பரவுவார் பாவம் பறைக்கும்மடி
பதினெண் கணங்களும் பாடும்மடி
திரைவிரவு தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வனடி.

திருச்சிற்றம்பலம்

பாம்புப் படுக்கையுள்ள திருமால், வேதங்களுக்குரிய பிரமதேவன், சரவணப் பொய்கையினனை முருகன் முதலானேர் சிந்தித்தும், தாளில் தலை பொருந்துமாறு வணங்கியும், கைகூப்பித் தொழுதும் வணங்கும் தன்மையுள்ள திருவடிகளும், தம்மைச் சரணடைந்தவர்களுக்கெல்லாம் புகலிடமான திருவடிகளும், வினை நீக்கம் பெறுவதற்கு அடியவர்கள் வழிபாடு செய்யும் திருவடிகளும், பதினெட்டுக் கணத்தவர்களும் போற்றிப் புகழும் திருவடிகளும் தென்கெடிலப் புனல் நாடனும் திருவீரட்டானத்தில் எழுந்தருளியுள்ள முத்திச் செல்வம் அருளுகின்ற சிவபிரானின் திருவடிகளேயாம்.

### வஜனம்ருதம்

(சுவாமி கெங்காதரானந்தா)

நல்லறமிக்க இல்லறத்திலிருந்து ஒழுக்கமுடைய மக்கள் பிறக்கின்றனர்.

நல்லறமில்லாத இல்லறமே ஒழுக்கங்கெட்ட பிரஜைகளுக்குக் காரணம்.

அறநெறி ஒழுக்கில்லாத அரசியல் வாதிகளின் ஆட்சியில் பஞ்சமா பாதகங்கள் பெருகும்.

அறமில்லாதவனுக்கு இறைவனும், இறையுணர்வு இல்லாதவனுக்கு அறமும் இல்லை.




### ஒழுக்கமுடைமை

(தத்தங் கடமைகளைச் சரிவரச் செய்து, உலக வாழ்க்கையை நடத்துதல்.)

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

நல்லொழுக்கம் இம்மையிலும் மறுமையிலும் இன்பத்துக்குக் காரணமாகும்; தீய ஒழுக்கம் எக்காலத்திலும் துன்பத்தையே கொடுக்கும்.

**Right Conduct**

Right conduct is the seed of happiness for ever; ignoble behaviour is ever the source of woe.

### 1982 ஒக்ரோபர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | — | வல்லிபுர ஆழ்வார் தேர்<br>நடேசர் அபிடேகம் |
| 2 | சனி | — | பூரணை விரதம்<br>வல்லிபுரம் சமுத்திர தீர்த்தம்<br>மகாத்மா காந்தி பிறந்த நாள் |
| 3 | ஞாயிறு | — | நாகதம்பிரான் கப்பல் விழா |
| 6 | புதன் | — | கார்த்திகை விரதம் |
| 11 | திங்கள் | — | கடையிற் சுவாமிகள் குருபூசை |
| 13 | புதன் | — | ஏகாதசி விரதம் |
| 14 | வியாழன் | — | பிரதோஷ விரதம்<br>அருணந்தி சிவாசாரியர் குருபூசை |
| 16 | சனி | — | அமாவாசை விரதம் |
| 17 | ஞாயிறு | — | நவராத்திரி விரதாரம்பம் |
| 18 | திங்கள் | — | ஐப்பசி மாதப் பிறப்பு |
| 26 | செவ்வாய் | — | சரஸ்வதி பூசை |
| 27 | புதன் | — | விஜயதசமி |
| 28 | வியாழன் | — | ஏகாதசி விரதம் |
| 30 | சனி | — | பிரதோஷ விரதம் |

### உருத்திரபுரம் முருகன் ஆலயம்

கிளிநொச்சியில் உருத்திரபுரத்தில் எள்ளுக் காட்டில் உள்ள ஸ்ரீ முருகன் ஆலய புனராவர்த்தனத்துக்கான அடிக்கல் நாட்டு விழா மில்க்வைற் தொழிலதிபரால் 1-9-82 புதன்கிழமை ஆரம்பிக்கப் பெற்றுக் கட்டட வேலைகள் பிரதேச அடியார்களால் நடைபெற்று வருகின்றன.

★ எவ்வித குற்றமும் இல்லாத நித்திய ரூபம் உள்ளவள் ★



# நவராத்திரியும் நாமும்

நவராத்திரி நாட்கள் நமக்கு வாழ்வளிக்கும் நாட்கள். வாழ்வுக்கு இன்றியமையாதனவான வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்று சாதனங்களையும் மலைமகள், அலைமகள், கலைமகள் என்னும் அம்பிகை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய அதி தேவதைகளிடம் பெறுதற்கான விழா நாட்கள். இந் நாட்களில் அம்பிகையைக் கொலுவிருத்திப் பூசை செய்தல் எல்லாத் தொழிலாளர்களுக்கும் ஏற்ற மளிப்பதாகும்.

ஆலயங்கள், மடங்கள், பாடசாலைகள் வீடுகள் எங்கும் பண்டிகை. பகல் இராப் பூசைகள். அம்பிகை வேண்டும் வரம் அருளுவாள் என்னும் நம்பிக்கையோடு விரதமிருந்து விழா நடத்திப் பூசை செய்தல் இந்து நாகரிகம்.

பொய், களவு, அசுசி, துக்கம், துன்பம் அகற்றி நல்ல மனத்தோடு, நல்ல மலர் தூவி வழிபாடு செய்தலே போதுமானது. வசதி வாய்ப்பு உள்ளவர்கள் பெருமளவில் பூசை செய்யும் போது, மற்றவர்களும் பங்கு பற்றலாம்.

### விஜயதசமி

நீங்கள் விஜயதசமி நாளில் உங்கள் பாடசாலையில், மடத்தில், மக்கள் மன்றத்தில் ஏடு தொடக்க ஒழுங்கு செய்தால், மில்க்வைற் தொழிலதிபர் உங்களுக்குத் தேவையான அரிச்சுவடி ஏடுகள் தருவார். சங்கங்கள், பாடசாலைகள் மூலம் உடனடியாக விண்ணப்பித்து முன் கூட்டியே பெற்றுக்கொள்ளுங்கள்.

## காந்தி கிராமம்

மதுரையில் சின்னாளம்பட்டி என்னும் இடத்தில், 25 ஏக்கர் நிலத்தில் திருவாளர் ஜி. ராமச்சந்திரனும் அவருடைய துணைவியார் திருவாட்டி சௌந்தரமும் வேறு சில தொண்டர்களும் அமைத்து நடத்திய காந்தி கிராம நிர்மாண ஊழியர் சேவையை நேரிற் பார்த்தறிதல் வேண்டும்.

இன்று 350 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு என்ன அழகு என்ன சௌந்தர்யம். ஆயிரவர் கூடியிருந்து நிர்மாணத் திட்டத்தில் ஒரு குடும்பத்தார் போல் வாழ்கின்றனர்.

ஆரம்பத்தில் 1947ஆம் ஆண்டில் ஒரு ஆச்சிரமமாக இருந்த நிறுவனம் டாக்டர் இராசேந்திரபிரசாத், ராஜாஜி, விநோபாஜி, கிருபளானி, காகா கலேல்கார் நேருஜி முதலான பெரியவர்கள் புகழும் அளவுக்கு வளர்ந்து பணி புரிகின்றது.

குழந்தைகள் அரிச்சுவடி முதல் பல்கலைக்கழகப் பட்டம் பெறும் அளவுக்கு அங்கே படிக்கிறார்கள். பலவிதமான பயிற்சிகள் அங்கே கிடைக்கின்றன. மருத்துவம், கிராமசேவைப் பயிற்சி வெகு திறமையாக நடைபெறுகின்றன.

விவசாயப் பண்ணை, மாட்டுப் பண்ணை, எண்ணெய் ஆலை, காகிதஞ் செய்தல், கதர் உற்பத்தி, தேன் சேகரித்தல் முதலியன அங்கே நடைபெறுகின்றன. இலங்கையில் வவுனியாவில் டாக்டர் சோ. இராஜசுந்தரமும் பாரியார் வைத்திய கலாநிதி சாந்தி அவர்களும் குழந்தைகளும் காந்தி வழியில் தொண்டாற்றப் புறப்பட்டுச் சேவையை அகலித்து வருகின்றார்கள். இவர்கள் வழி ஒளியூட்டுவதாகுக.

## அருள் விருந்து

(ஆதாரம்: தர்மசக்கரம்)

தூய உள்ளத்தில் வெறுப்பு உண்டாகாது.
குழந்தை உள்ளம் உள்ளவன் சான்றோனாவன்.
நான் என்னும் அகந்தை முத்திக்குத் தடை.
பொறாமை மனித மேன்மையைத் தடுக்கின்றது.
இயற்கையை மீறி எவரும் நடக்க முடியாது.
மனதைப் பண்படுத்தலே வாழ்வின் முக்கிய நோக்கம்.
நெறியான வாழ்வில் நேர்மை அனைத்தும் உண்டு.
உடம்பு நடமாடும் அரிய ஆலயம்.
பற்றினால் துன்பங்கள் யாவும் வருகின்றன.
மனத்திலிருந்து தற்பெருமையை நீக்குதல் அறம்.
தியானஞ் செய்யும் மனத்தில் பாபம் நுழையாது.
பற்றற்ற நிலையில் பேரின்பம் பிறக்கின்றது.
ஆசை எத்தகையதோ, பந்தமும் அத்தகையது.
கடவுளன்புக்கு அடுத்தது தாயின் அன்பு.
பலன் கருதிச் செய்யும் உதவி துன்பந் தருவதாகும்.
அடி பணிந்து நடப்பவன் ஆளப் பழகுகிறான்.
சுயநலம் படைத்தவர் முன்னேற்றம் அடைவதில்லை.
மனம் அடங்காதவனுக்கு எதிலும் இன்பம் இல்லை.
கடவுள் நம்மிலும் நமக்கு அப்பாலும் இருக்கிறார்.
ஆசை ஒழிந்த இடத்தில் நரகம் இல்லை.

## பெருமளவில் மரங்களை நடுவோம்

### வேம்பு இலுப்பை

ஓரளவுக்கு மழை பெய்து மண் ஈரமாயுள்ளபோது பலவிதமான மரக்கன்றுகளை வேண்டிய இடங்களில் நடுவோமாக. வேம்பு, இலுப்பை நிழல் தருவதோடு எண்ணெய் வித்துக்களையும் தருவனவாகும்.

### இப்பில் இப்பில்

இப்பில் இப்பில் என்னும் அதிசய மரம் விரைவில் வளர்வதோடு, புரதச்சத்துள்ள இலை, தழை தருவதாகும். ஆடு மாடுகளுக்கு அருமையான சத்துள்ள உணவாவதோடு, அது காய்ந்து வரண்டு போனாலும் தவிட்டுடன் கலந்து கொடுப்பதற்கு ஏற்றது.

விரைவாய் வளரும் இப்பில் இப்பில் விறகுக்கும் பயன்படுவதாகும். மேலதிகமான இலை தழை நல்ல பசுந்தாள் பசளையுமாகும்.

## பனையபிவிருத்தி

எங்கள் பிரதேசங்களில் இன்னும் கூட்டுமொத்தமாக ஒரு கோடி பனை மரங்கள் பயன்தரத் தொடங்கவில்லை. நாங்கள் இம்முறை ஆயிரமாயிரமாகப் பனம் விதைகளை நாட்டிப் பனையபிவிருத்தி செய்தல் வேண்டும். இரண்டாயிரம் பனம் விதைகள் தர வல்லவர்களுக்குப் பெரிய காற்பந்து பரிசாகத் தருவதற்கு மில்க்வைற் தொழிலதிபர் காத்திருக்கிறார். விளையாட்டுக் கழகங்களும் பனையபிவிருத்தி செய்வதற்கு இது நல்ல தருணம்.

## ஐப்பசி வெள்ளி

அடுத்து வருகின்ற ஐப்பசி வெள்ளிக்கிழமைகள் சிறுவர், சிறுமியர் சைவ சமய தீட்சை, சிவதீட்சை பெற்றுக்கொள்வதற்குப் பெருவாய்ப்பான தினங்களாகும். ஆலயங்கள், மடங்கள், சைவ வித்தியாசாலைகள், சனசமூக நிலையங்கள் முதலிய இடங்களில் கூட்டாகச் சேர்ந்து குருக்களை ஒழுங்கு செய்து தீட்சை பெறுபவர்களுக்கு நால்வர் படம், திருநீற்றுப்பை, நாவலர் எழுதிய நித்திய கரும்விதி முதலிய நூல்களை மில்க்வைற் தொழிலதிபர் இலவசமாகத் தருவார். வசதியானால் நேரில் உங்களிடம் வந்து உங்களுக்கு நல்லாசி வழங்கிப் பரிசில்களும் தருவார். சைவச் சிறுவர் சிறுமியர்களே! சிவதீட்சை பெறத் தவறாதீர்கள்.

## மரக்கறிச் செடி கொடிகள்

காலந்தோறும் மற்ச மாமிசம் சாப்பிடுகிறவர்கள், அவற்றை விட்டு மரக்கறி உணவே சாலச் சிறந்தது என்று தாவரவுணவுண்ணத் தலைப்படுகிறார்கள். இது நல்ல தருணமாதலால் தோட்டக்காரர் மேலதிகமாக மரக்கறிப் பயிர்களான கத்தரி, வெண்டி, தக்காளி, பீட், கறட், கோவா, வெங்காயம், மரவள்ளி, புடோல், பூசினி, பாகல் முதலிய பயிர்களை அதிகமாகப் பயிரிடுவார்களாக.

## இடம்பட வீடெடேல்

நல்ல செம்மண் தறைகளான தோட்டக் காணிகளில் பலவிடங்களில் வீடுகள் கட்டப் பெறுகின்றன. வீடுகள் வேண்டும் தான். அதற்காக நன்றாகத் திருத்திய காணிகளில், பயன் தருகின்ற காணிகளில் பெரிய வீடுகள் கட்டினால் விளைவு குன்றும். எனவே அத்தியாவசியமானால் ஒடுங்கிய இடத்தில் மாடி வீடுகள் கட்டினால் தோட்ட நிலம் அதிகம் பாதிக்கப்படாது.

## பருப்பிலும் பார்க்கப் பயறு சிறந்தது

துவரம் பருப்பு, மைசூர்ப் பருப்பு முதலிய பருப்பு வகைகளிற் பார்க்கப் பச்சைப் பயறு வெகு விசேடமானது. கறிக்கும், அன்னத்துக்கும், புற்கைக்கும், பலவித பலகாரங்களுக்கும், தனியுணவுக்கும் பயன்படும் பயறு காலந்தோறும் வயல்களில் விளைதல் வேண்டும். அடுத்தமுறை நெல்லறுவடை செய்த பின், கட்டாயமாகப் பாத்திகளில் பயறு விளைவிப்போமாக.

## பாற் பண்ணையாளர் பசு வளர்ப்போர் சங்கம்

வடபகுதியில் பாற் பண்ணையாளரும், பசு வளர்ப்போரும் சேர்ந்து அங்கம் வகிக்கும் சங்கம் ஒன்று அமைதியாக உண்டாகி, அமைதியாகப் பணிபுரிந்து வருகின்றது. மில்க்வைற் தொழிலதிபரைத் தலைவராகக் கொண்ட இச் சங்கத்தில், நிபுணர்கள், மிருக வைத்தியர்கள், அநுபவசாலிகள் இருக்கிறார்கள்.

உலர்வலையத்தில் தாக்குப் பிடிக்கக்கூடிய நல்ல இனத்துப் பசு வளர்த்தலில் இவர்கள் அக்கறை கொண்டுள்ளார்கள். அதிக பால் தரக்கூடிய கலப்பினத்துப் பசு எது என்று அநுபவத்திற் கண்டு, அந்த இனத்தை இங்கே நன்கு பெருக்குதல் வேண்டும் என்பதே இவர்கள் நோக்கம்.

உலர்வலய மாடுகள் என்று ஒன்று இதுவரை கண்டு பிடிக்கப்பெறவில்லையாயினும், அவுஸ்திரேலிய இனமும், யமெக்கா இனமும் உஷ்ணத்தைத் தாங்கக் கூடியவைகளாகும். இடவசதி நோக்கி 40 சதுர அடி நிலத்தில் சமாளிக்கக்கூடிய சிறிய இனம் நல்லது என்பர். பாலைவனப் பகுதியில் சம்பந்தப்பட்ட கல்பகா போன்ற இனமும் அதிக பால் தரும் யேர்சி இனமும் கலந்தால் எமக்கு நன்மை உண்டாகும் என்பர். யேர்சி இனம் விரைவில் சினைப்படும் இயல்பினது, அன்றி நோயின்றி வாழக் கூடியது. பாலைவனப் பழக்கமுள்ள கல்பகா பசுவுக்குக் குறைந்த அளவு உணவு போதுமானது. யேர்சிப் பசு ஓரளவுக்கு உஷ்ணத்தைத் தாங்கக் கூடியது.

யாழ்ப்பாணத்தவரின் விருப்பம் வெள்ளைப் பசு, கன்று ஈனவேண்டும், பால் தருதல் வேண்டும், நோய் வருதலாகாது, குறைந்த உணவில் வாழ்தல் வேண்டும், பராமரிக்கக் கூடியதாக அமைதல் வேண்டும் என்பனவாதியனவாகும்.

இவைபோன்ற அருமையான கருத்துக்களைப் பேராதனை மிருகவளர்ப்பு நிபுணர், அதிகாரி திரு. க. பாலச்சந்திரன் அன்று பாற் பண்ணையாளர்கள் சமுகத்தில் பேசினார்.


## நெல்லிக்கனி

நெல்லிக்கனியின் அருமை பெருமைகளை ஔவையார் பாடுவதற்கு முன்னரே முனிவர்கள் சித்தர்கள் கண்டிருந்தனர். இன்று உயிர்ச்சத்து நிறைந்த கனி என உலகம் போற்றும் நெல்லி எங்கள் நாட்டுக்கு ஒரு வரப்பிரசாதம். ஏழைகளின் அப்பிள்.

### நீண்டகால வாழ்க்கை

சீனாதேசத்தில் மொங்கோலியா பிரதேசத்தில் பயன் உலிஸ்க் என்னும் பகுதியில் அக்பை என்னும் தலைவனும் காமிலா என்னும் தலைவியும் முறையே 118 வயதிலும் 115 வயதிலும் தங்கள் திருமண நூற்றாண்டு விழாவை 1979ஆம் ஆண்டிற் கொண்டாடினார்கள்.

★ பலவகை ஆச்சரியங்களுக்கு இருப்பிடமானவள் ★



# பாரதியாரின் வசன நடை

பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி என்றாற்போல, பைந்தமிழ் வசன நடைக்கும் பாரதி ஒரு வல்லாளன் என்பர். பாரதியார் எழுதிய சின்னச் சங்கரன் முதலிய வசன பாகங்களைப் படித்த இராசகோபாலாசாரியார், கல்கி கையாண்ட வசன நடை பாரதியாரிலிருந்தே உதயமாயிற்று என்று ஆணித்தரமாக எழுதியுள்ளார்.

## பாரதியாரின் கதைகள்

பாரதியார் எழுதிய கதைகள் யாவும் சிறப்பு வாய்ந்தவை. அவை ஒவ்வொன்றும் வியக்கத்தக்க அறிவுக் கதைகள். அவை ஞானரதம், நவதந்திரக் கதைகள், சந்திரிகையின் கதை, வேடிக்கைக் கதைகள், சின்னச் சங்கரன் கதை, தராசு முதலியனவாகும்.

## ஞானரதம்

பாரதியாரின் மனோபாவத்தைச் சித்திரிக்கும் கற்பனைக் களஞ்சியம் எனப் போற்றப் பெறுவது ஞானரதம். இதில் பீடிகை, உபசாந்தி லோகம், கந்தர்வ லோகம், இன்ப உலகம், பந்தாட்டம், மதனன் விழா, பறவைக் கூத்து, கடற்கரை, அருவி, சத்திய லோகம், மண்ணுலகம், தர்ம லோகம் பேசப்பெறுவன.

## பதஞ்சலி யோகசூத்திரம்

''ஊருக்கு உழைத்திடல் யோகம்'' என்று உறுதியாகப் பாடிய பாரதியார், புனிதமும் புகழும் பெற்ற பதஞ்சலியாரின் யோகசூத்திரத்தை அழகாக வசன நடையில் மொழிபெயர்த்துள்ளார். யோகசூத்திரத்திற் பயின்று வந்த கருத்துடைய பாகங்களை இறுக்கமான சிறு வசனங்களில் பாரதியார் சொன்ன வண்ணம் அவர் இருமொழிப் புலமையும் விடய விளக்கமும் உள்ளவர் என்பதைக் காட்டும். பாரதியார் பதஞ்சலி யோகசூத்திரத்தைப் படித்ததோடு அதற்குப் பெரியவர்கள் எழுதிய வியாக்கியானங்கள், விருத்தியுரைகள் என்பனவற்றையும் படித்துத் தமது சொந்தக் கருத்தை நயம்படக் கூறியுள்ளார்.

## பாரதியாரின் பாடல்கள் எல்லோருக்கும் சொந்தம்

பாரதியாரின் பாடல்களைப் பிரசுரிப்பதற்கென்றே 1925ஆம் ஆண்டில் பாரதி பிரசுராலயம் உதயமானது. அச்சங்கத்தில் பாரதியாரின் தம்பி விசுவநாதன், நண்பன் ஹரிஹர சர்மா, மகள் சகுந்தலாவின் மாப்பிள்ளை இடம் பெற்றிருந்தனர். இச் சங்கத்தினர் 4000 ரூபா கொடுத்து மனைவி செல்லம்மாளிடம் பதிப்புரிமையைத் தமதாக்கினர். பின்னர் 1949ஆம் ஆண்டு தமிழ் நாட்டரசாங்கம் பதிப்புரிமையை 15000 ரூபாவாக விலைக்குப் பெற்று நாட்டுச் சொத்தாக்கியது. இதனால் மனைவி செல்லம்மாள், பெண்கள் சகுந்தலாவும் தங்கம்மாவும் ஆளுக்கு 5000 பெற்றனர்.

# நிலக்கடலை செய்கிறார்கள் பாராட்டுகிறோம்

யாழ்ப்பாணத்து நவாலிப் பகுதியில் சில வயற் சொந்தக்காரர் தங்கள் பாத்தியில் கிணறு வெட்டியுள்ளார்கள். இவர்கள் முயற்சியைப் பாராட்டுகிறோம். இவர்கள் அறுவடைக்குப் பின் நிலக்கடலை பயிரிட்டு வெற்றி பெற்றுள்ளதை நேரிற் கண்டு வியந்து பாராட்டி மகிழ்ந்தோம். இவர்களைத் தொடர்ந்து ஏனைய கமக்காரரும் நிலக்கடலை செய்தால், பயனுண்டாகும். வயலுக்குப் பசுந்தாள் பசளையும் கிடைக்கும்.

## வரண்ட பகுதிகளிலும் கோதுமை விளையும்

இலங்கையின் வரண்ட பிரதேசங்களிலும் கோதுமைத் தானியம் விளையும் என்று பரீட்சார்த்தமாகப் பயிரிட்டவர்கள் கண்டுள்ளார்கள். இதனைப் பரவலாகப் பயிரிட என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் மில்க்வைற் தொழிலதிபர் செய்து வழிகாட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளார். விவசாயத் திணைக்களம் வேண்டிய உதவி செய்வதாக வாக்களித்துள்ளது. நீங்களும் கோதுமையை பயிரிட்டுப் பயன் பெற முயற்சி செய்யலாம்.


# இந்திய உதவித்தானிகர் வருகை. தருகை. பெறுகை.

பாரத அரசாங்கத்தின் இலங்கைத் தானிகரின் உதவியாளர் மாட்சிமை தங்கிய அபயங்கார் அவர்கள், நல்லூர்த் தொகுதியின் கல்விவள நிலையத்துக்குத் திரைப்படக் கருவி ஒன்றை பாரத நாட்டின் அன்பளிப்பாகத் தருவதற்கு வருகைபுரிந்தார்.

நல்லூர்த் தொகுதிப் பிரதிநிதி, அபிவிருத்தி சபை அங்கத்தவர்கள், மாநகர சபை அங்கத்தவர்கள், நாற்பது பாடசாலைகளின் அதிபர்கள், கல்விவள நிலையத்து ஆலோசகர்கள், வடமாநில கல்விப் பணிப்பாளர், பிரதம கல்வியதிகாரி, வட்டாரக் கல்வியதிகாரி முதலான பெரியவர்கள் சமுகமளித்திருந்தார்கள்.

வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களை நல்லூர்த் தொகுதிப் பிரதமர் சிவசிதம்பரம் அவர்கள் அபயங்கார் அவர்களுக்கு அறிமுகஞ் செய்துவைத்ததும், தொழிலதிபரின் கரங்கள் நீண்டன. அவர்கள் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் வரலாற்று நூற் பிரதிகளைத் தானிகருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். கொண்டும் கொடுத்தும் குதூகலமாக வாழ்தல் பொதுநல வாயத்தின் கொழும்புத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் என்று மில்க்வைற் செய்தி ஆசிரியர் விளக்கி நன்றி கூறினார்.

★ தாமரை மலரை இருப்பிடமாகக் கொண்டவள் ★



# வாழ்விக்க வந்த காந்தி

சுதந்திரம் பற்றிப் பேசிய லோகமான்ய திலகருக்குச் சிறைத்தண்டனை, சுயாட்சிபற்றிப் பேசிய வெள்ளைக்காரப் பெண் பெசண் அம்மையாருக்கும் சிறைத்தண்டனை.

சிறையினின்று வெளிவந்த திலகர் கண்ட ஒப்பில்லாத வீரர் மகாத்மா காந்தி; காந்திமகான் மக்களுக்காகப் பணி செய்யத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டார்.

பம்பாய் மாநிலத்தில் சம்பரான் பிரதேசத்தில் ஏழை உழவர்கள் வரிச்சுமையால் வருந்தியபோது, காந்தியடிகள் அங்கே போனார். அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. அவர் தடையையும் மீறிச் சென்று மக்களுக்கு வழி காட்டினார். காந்தி அடிகளுக்கு உதவியாக இராசேந்திர பிரசாத் அவர்களும், வல்லபாய் பட்டேலும் தோள் கொடுத்தனர்.

ஆமதாபாத் என்னும் இடத்தில் தொழிலாளருக்குத் தாங்கமுடியாத நெருக்கடி. காந்தியடிகள் அங்கேயும் விரைந்து தோள் கொடுத்துத் தொழிலாளரின் தொண்டரானார்.

காந்தியடிகள் சுதந்திரப் பாதைக்கு வழிகாட்ட வேண்டிய தலைவரானார். வாழ்விக்க வந்த மகாத்மாவானார். சுதந்திரம் பெறுவதானால் கத்தி, வாள், வில் அம்பு, தடியடி, துப்பாக்கி, பீரங்கி இல்லாமல், இரத்தஞ் சிந்தாமல், உயிரிழக்காமல் வாழ்வைக் கெடுக்காமல் பெறுதல் வேண்டும்.

உண்மையையும் கொல்லாமையையும் உறுதுணையாகக் கொண்டு காந்தியடிகள் சுதந்திரப் பாதைக்கு வழி காட்டினார். நாடு முழுவதும் சுற்றுப் பயணஞ் செய்தார்.

ரௌலட் சட்டத்தை எதிர்த்ததில் தமிழ் நாடு காந்தியடிகளுக்கு அமோக ஆதரவும் ஒத்துதவியும் புரிந்தது. சத்தியாக்கிரகத்தை நல்ல முறையில் பிரயோகித்தவர் செந்தமிழ் நாட்டினரேதான். சுதந்திர இயக்கம் குடிமக்கள் இயக்கமாக மாறியது. காந்தியடிகள் வாழ்விக்க வந்த மகாத்மாவானார்.

மகாத்மா பொதுமக்களிடம் கொண்டிருந்த மதிப்பும் அன்பும் பெரிய பக்தி. மக்கள் அற வழியில் அன்பு மார்க்கத்தில் வாழ வேண்டும் என்று அவர் வாழ்ந்து காட்டினார்.

சுதந்திர இந்தியா உலக சமாதானத்துக்கு வழி காட்டும் என்று காந்தியடிகள் உறுதியாய்க் கூறினார். அவர் கூறியது உண்மையாய் விட்டது.

## சத்தியாக்கிரகம் கைக்கொண்டமை

வீரர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் ஒரு ஆயுதப் பிரயோகத்தால் வலிமையும் பெருமையும் வெற்றியும் ஈட்டியுள்ளார்கள். எல்லோரும் புறக் கருவிகளால் ஆயுதப் பிரயோகம் செய்து வெற்றியீட்டியமைக்கு மாறாக அகக்கருவியால், அந்தக் கரணசுத்தியால், சத்தியம் என்பதை உண்மை, வாய்மை, மெய்மை என்னும் வகையில் உள்ளத்தால், வாக்கால், செயலால் பரிசுத்தமாகக் கைக்கொண்டு, கையாண்டு வெற்றியீட்டிய பெருமை காந்தியடிகளுக்கே தனியுரிமையானது. அது அவருடைய கண்டுபிடிப்புமாகும்.

தென்னாபிரிக்காவில் ஆங்கிலேயரான வெள்ளைக்காரர் சிறுபான்மையினராயிருந்தும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி அங்கே தொழிலாளராகக் குடியேறி வாழ்ந்த பெரும் பான்மையினரான இந்தியரைக் கறுப்பர்கள் என நிறத்துவேசம் காட்டி ஆட்டி அசைத்து ஆட்கொண்டிருந்தனர். அவர்கள் தமக்குச் சாதகமாகக் கறுப்பர் சட்டம் இயற்றி நிறைவேற்றி இந்தியரைத் துன்புறுத்தினர்.

இந்தக் காலகட்டத்தில் 1-1-1907இல் சுயாட்சிப் பொறுப்பேற்ற திருன்ஸ்வால் மாநிலம் தன் போக்கில் தடித்தனமாக நடந்தபோது, காந்தியடிகள் அதனை எதிர்ப்பதற்குச் சத்தியத்தை ஆயுதமாகக் கைக்கொண்டதே சத்தியாக்கிரகம் ஆயிற்று. சத்தியாக்கிரக சக்கராயுதம் உருளத்தொடங்கிற்று.

## சத்தியாக்கிரக பிரயோகம்

இற்றைக்கு 52 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலத்தில் அவர்களுக்கு வரவுக்கு மிஞ்சிய செலவு உண்டானதால் அவர்கள் பொதுமக்கள் சுமக்க முடியாத அளவுக்கு உப்பு, மருந்துச் சரக்கு முதலியவற்றில் வரியைக் கூட்டினர். மக்கள்பட்ட துன்பத்தைக் கண்டு மனம் நொந்த மகாத்மா, இராசப் பிரதிநிதியிடம் வரிகளைக் குறைக்குமாறு எழுதினார், கேட்டார்.

காந்தியடிகள் கேட்டதற்கு மாறாக நடந்த இராசப் பிரதிநிதி அவர்களின் போக்கைக் கண்டிப்பதற்கு மகாத்மா தமது சத்தியாக்கிரகத்தைப் பிரயோகிக்கத் தீர்மானித்தார்.

அறுபத்தொரு ஆண்டு நிரம்பிய காந்தியடிகள் 12-3-1930இல் எழுபத்தொன்பது தொண்டர்கள் புடைசூழ 200 மைல் தூரத்துக்கு யாத்திரை செய்யத் தொடங்கினார். சபர்மதி ஆச்சிரமத்திலிருந்து தண்டிக் கடற்கரை வரை அவர்கள் 24 நாட்கள் நடந்து சென்றதை முழு உலகமும் அவதானித்துக் கொண்டிருந்தது. சென்ற வழியில் குதூகலமும் உற்சாகமும், உணர்ச்சியும் வேலை செய்யவே, வழியோர ஊர்களில் விதானை வேலை பார்த்த 300 கிராமத் தலைவர்கள் தங்கள் வேலையை வேண்டாம் என்று பரித்தியாகஞ் செய்தனர். மக்கள் குண்டாந் தடியடியையும் மறியலையும் மனமகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டனர். சத்தியாக்கிரகத்துக்கு முன் என்ன செய்வது என்று தெரியாமல் ஆங்கில அரசாங்கம் திகைத்தது. காந்தியடிகளைத் தொட்டாலும் ஆபத்து, விட்டாலும் ஆபத்து என்று கருதியது.

## விடுதலை இயக்கத்தின் வழிகாட்டி

வீரசுதந்திரம் வேண்டி நின்ற இந்திய மக்களின் தலைவர்களைக் கண்டு, இணக்கத்தை உண்டாக்குவதற்கு இங்கிலாந்திலிருந்து சேர் ஸ்போர்ட் கிறிப்ஸ் என்னும்

★ மிகுந்த ஆனந்தப் பெருக்கு உடையவள் ★

பெரியார் இந்தியாவுக்கு வந்தார். அவரைக் கண்டு பேசிய இந்தியத் தலைவர்களும் காந்தியடிகளும் அவர் கொண்டு வந்த சமரச முறைக்கு இணங்க முடியவில்லை.

எனவேதான் காந்தியடிகள் வெள்ளைக்காரரை இந்தியாவை விட்டுப் போங்கள் என்னும் இயக்கத்தை வரைந்தார். அதனை அகில இந்திய காங்கிரஸ் மாநாடு ஏற்றுக்கொண்டதும், காந்தியடிகள் மனமகிழ்ச்சியோடு, ''நானே உங்களுக்கு வழிகாட்டியாய் இருக்கிறேன்'' என்று தனது ஒத்துதவியைக் கொடுக்க முன்வந்தார்.

இங்ஙனம் இயக்கம் உருவாகவே 9-8-1942இல் காந்தியடிகள் உட்பட எல்லாத் தலைவர்களையும் வெள்ளைக்கார அரசாங்கம் கைது செய்து சிறையில் தள்ளியது. இதனால் கொந்தளிப்பு உண்டாகிப் பொது மக்கள் கொதித்து எழுந்தபோது பொலிசுக்காரர் கண்ணீர் புகையைப் பிரயோகித்தனர். பம்பாய் நகரில் கோவாலிய கட்டத்தில் நடந்த பிரயோகம் சரித்திரத்தில் இடம் பெற்ற பெரிய அழிவுச் செயலாகும்.

## மகாத்மா வழியிற் பெண்கள்

காந்தியடிகள் கையாண்ட புனிதமான வழியில் ஆண்களேயன்றி பெண்களும் கைகொடுத்துக் கலந்து பங்களித்துள்ளார்கள். காந்திமார்க்கத்தில் தென்னுபிரிக்கத் தமிழ்ப் பெண்கள் பீடுநடை நடந்துள்ளார்கள். தமிழகத்திலும் பல்வேறு வைபவங்களில் மாதர் பங்களிப்புப் பெரிதாயிருந்தது.

வடக்கில் பண்டித நேருவின் தாயார் சொரூபராணி, மனைவி கமலாநேரு, மகள் இந்திராகாந்தி, இன்னும் பேத்திமார், மருகிகள், மாணுக்கியர் என்றித் திறத்தோர் பலர் காந்தியடிகளின் இருபக்கங்களிலும் மிண்டி வேர் போல் தாங்கி நின்று உபகரித்துப் பணிபுரிந்தனர்.

காந்தியடிகளின் உப்பு சத்தியாக்கிரகத்தின் போது சூரத் நகருக்கு அண்மையில் அவருக்குப் பதிலாக ஸ்ரீமதி சரோஜினி நாயுடு தலைமைதாங்கி, வரலாறு படைத்துள்ளார். பொலிசுக்காரரின் குண்டாந்தடிகள் மண்டையைப் பிளந்தபோதிலும் மாதர் தங்கள் காலைப் பின்வைக்கவும் இல்லை, அஞ்சி ஓடவுமில்லை. சமையல் வேலையில் நல்ல அநுபவமுள்ள பெண்களுக்கு, உப்புக் காய்ச்சுவதில் அலுப்பு, களைப்பு உண்டாகவில்லை. வெள்ளைக்கார அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாயிருந்த ஒரு துறையில் பெண்கள் தீவிரமாக எதிர்ப்புத் தெரிவித்தனர். உப்புக் காய்ச்சினர்.

## கனவு பலித்தது
## காந்தியடிகள் காதைப் பொத்தினர்

வீர சுதந்திரம் வேண்டி நின்ற பாரத மக்கள் வேறொன்றையும் கருதாமல் சுதந்திரத்தையே கனவிற் கண்டு வந்தார்கள். அவர்கள் நீண்ட காலம் கண்ட கனவு இறுதியாக 15-8-1947இல் பலித்தது. பாரத நாடு பழம் பெருமையுடன் பூரண சுதந்திரம் பெற்றது. அரசாதிகாரம் நிலவிய செங்கோட்டையில் வெள்ளைக்காரர் கொடி போயகலப் பாரதத்தின் மூவர்ணக் கொடி பட்டொளி வீசி உச்சக் கட்டத்திற் பறந்தது.

கொடியேற்று வைபவத்திற் கலந்துகொண்ட இராசப் பிரதிநிதி, மவுண்பேற்றன் பிரபு அவர்கள் சொன்ன வாசகம் இது. ''இந்த வரலாற்றுப் புகழ் பெற்ற வைபவத்தில் நாங்கள் மகாத்மா காந்தியடிகளை மறக்கவொண்ணுது. அவர் அகிம்சா வழியில் தேச விடுதலைக்கு உழைத்துப் பூரண வெற்றியீட்டியவராவர்.'' நாடெங்கும் கோலாகல வைபவங்கள் விழாக்கள் கொண்டாடப் பெற்ற வேளையில், காந்தியடிகள் கற்கத்தா நகரில் எங்கேயோ ஒரு மூலையில் ஒதுங்கியிருந்து, வெடிச் சத்தம் காதைத் துளையா வண்ணம் விரல்களால் காதைப் பொத்தியவாறு அமைதியாயிருந்து உபவாசத்தோடு வழிபாடாற்றினர்.

சுதந்திரத்தையடுத்து வந்த 2-10-1947ஆம் நாள் காந்தியடிகளின் 78ஆம் பிறந்த நாள் மங்கலமாயிருந்தது. அன்று அயல் மாநிலங்களில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் அவரை வெகுவாக உள்ளம் உருகச் செய்தன.

## பிரிவினையால் வந்த கொடுவினை

பாரத சுதந்திரத்துக்குப் பாடுபட்டவர்கள் முன்னிலையிலேயே நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மொஹெஞ்சதரோ, ஹரப்பா என்னும் புகழ் பெற்ற நகரங்கள் அமைத்துச் சீலம், சீனுப், ராவி, பியாஸ், ஷட்லெட்ஜ் என்னும் ஐந்து நதிகளிடையே திராவிட நாகரிகம் செழித்தோங்கிய பஞ்சாப் மாநிலத்தின் மேற்குப் பாகம் பாக்கிஸ்தான் என்னும் புனித பூமியாகி, அன்பு மார்க்கத்தாரிடம் கொடுக்கப்பட்டது.

மேற்குப் பஞ்சாப் மாநிலத்தில் இருப்புக்கொள்ளவியலாத இந்துக்களும் சீக்கியரும் இந்திய மாநிலங்களை நோக்கி ஐம்பத்தேழு மைல் நீள வரிசையில் இடம் பெயர்ந்து சொத்துக்களை எல்லாம் விட்டு உயிரைப் பிடித்துக்கொண்டு வந்தனர்.

இந்தச் செய்தியை மகாத்மா காந்தியடிகள் தாங்க முடியாத மனவேதனையோடு தமது பிரார்த்தனைக் கூட்டத்திற் சொல்லி வருந்தினர். இவர்களையெல்லாம் ஆறுதலாகக் குடியமரச் செய்யும் வரை தாம் ஓயப்போவதுமில்லை, உறங்கப்போவதுமில்லை என்று அவர் சொன்னர்.

## சாகும்வரை உண்ணுவிரதம்

பிரிவினையின் பயனுக டெல்கியில் எழுந்த இனக் கலவரம் நீடித்து நிலவியமை மகாத்மா காந்தியடிகளுக்குப் பெரிய மனத்தாக்கலை உண்டாக்கிவிட்டது. அவர் உடனடியாக உண்ணுவிரதத்தை ஆரம்பித்துச் சாகும்வரை பட்டினி கிடப்பேன் என்ருர்.

காந்தியடிகளின் உயிரைக்காக்க எல்லோரும் எதையும் செய்யக் காத்திருந்தனர். இருசாராரிடையேயும் இணக்கத்தை உண்டாக்குவதற்கு எல்லோரும் அரும்பாடு பட்டனர்.

காந்தியடிகள் சொன்ன வண்ணம் உடனடியாக இந்தியா பாக்கிஸ்தானுக்கு 55 கோடி ரூபாவைக் கொடுத்தது. ஆறு நாட்களில் ஓரளவு கொந்தளிப்புத் தணிந்து அமைதி நிலவியதை அறிந்ததும் காந்தியடிகள் தோடம் பழத்தண்ணீர் அருந்தி உண்ணுவிரதத்தை விட்டார். தமது தெய்வ நம்பிக்கையும் பிரார்த்தனையும் தம் வாழ்வில் தமக்கு வெற்றி தந்து, தம்மை காத்தன என்று அவர் கூறினர்.

## அன்பு வழியில் என்புந்தோலும்

காந்தியடிகள் கைக்கொண்ட அன்பு வழியில் அகிம்சா முறையும், தம்மைத் தாமே வருத்திக் கொள்வதும் பட்டினி கிடப்பதும் அவரை வெகுவாக வாட்டிவிடவே, அவர் எலும்புந் தோலும் உள்ள உடம்பினராயினர். தமது பேத்திமார் இருபுறமும் தாங்கிவரப் பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் போய் வந்தவர் நாளடைவில் நாற்காலியில் தூக்கிச் செல்லுமாறு இருந்தார்.

தமது பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வருபவர்களை எவ்விதமான சோதனைக்கோ தடையுத்தரவுக்கோ ஆளாக்காமல், நேரில் உள்ளே புகவிடுமாறு கட்டளையிட்டிருந்தார். அதனால் இளைஞன் ஒருவன் ஒரு சமயம் அவர்மீது கைக்குண்டு எறிந்ததும் உண்டு. அது குறிதவறிப் போனதும் காந்தியடிகள், அவன் மீது எவ்வித துவேசமும் காட்டாதிருக்குமாறு பணித்தார். பிரதமர் நேருவும், உதவிப் பிரதமர் பட்டேலும் இடையிடை கருத்துவேறுபாடு காரணமாகத் திசைதிரும்ப எத்தனித்த போதெல்லாம் காந்தியடிகள் அவர்களை ஒற்றுமையாக்கி, இணைபிரியாதிருக்குமாறு பணித்தார். அவர்களும் பணிவன்புடன் வாழ்ந்தார்கள்.

## வாழ்வின் ஒளி அணைந்தது

என்றும் போல அன்றும் பிரார்த்தனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிர்லா மாளிகையில் 500 பேர் கூடியிருந்தனர். காந்தியடிகள் அன்று ஒருசில நிமிடங்கள் காலந்தாழ்த்தி வந்தார். அவர் வந்ததும் கூட்டத்தில் இருந்த ஒருவன் எழுந்து இரண்டடி தூரத்தில் நின்று ''நமஸ்தே'' என்று வணங்கினான். தொழுதகையுள்ளும் படையுண்டு என்று எப்பவோ திருவள்ளுவர் கூறியுள்ளவாறு அவனுடைய கும்பிட்ட கையுள் துவக்கு இருந்தது. அவன் காந்தியடிகளைக் குறிபார்த்து மூன்று முறை சுட்டான். ''ஹே ராம்'' என்று கூறிய வண்ணம் காந்தியடிகள் நிலத்திற் சாய்ந்தார். அவரைத் தாங்கியவர்கள் அருகிலுள்ள அறைக்குள் தூக்கிச் சென்றனர். வைத்திய நிபுணர் ஆவி பிரிந்ததென்றூர். அது கேட்டு அவ்விடத்துக்கு விரைந்த பண்டித நேரு, கண்ணீர் வார உள்ளமுருக அழுத வண்ணம், ''எங்கள் வாழ்வின் ஒளி அணைந்தது. எங்கும் இருள் சூழ்ந்து நிலவுகின்றது. நாங்கள் அவருக்காகச் செய்யக்கூடியது அவர் எங்களுக்கு வாழ்ந்து காட்டிய வண்ணம் வாழ்ந்து சத்தியத்தைக் கடைப்பிடித்தலேயாகும்'' என்றூர்.

## காந்தியடிகளின் இறுதியாத்திரை

மகாத்மா காந்தியடிகள் தேசிய வீரரானபடியாற் போலும் அவரின் உடலம் ஆயுத வண்டியில், எல்லோரும் தரிசிக்கும் வண்ணம் எடுத்துச் செல்லப் பெற்றது. இருநூறு படைவீரர் வண்டியை இழுத்துச் சென்றனர். பிர்லா மாளிகையிலிருந்து 11-45 மணியளவில் புறப்பட்ட வண்டி, நத்தை வேகத்தில் ஊர்ந்து 4-20 மணியளவில் யமுனு நதிக்கரையையடைந்தது. தகனக் கிரியையை 1500000 மக்கள் தரிசித்து வணங்கினர். இரண்டு மைல் நீளமுள்ள ஊர்வலத்திலேயே பல்லாயிரம் மக்கள் கண்ணீர் வழிய நடந்து சென்றனர். வழியெங்கும் 10,00000 மக்கள் நிரையாக நின்று வணங்கினர். சென்றவர்கள் வழியெங்கும் வேத சுலோகங்களை ஓதினர். நின்றவர்கள் மகாத்மா காந்திக்கு ஜே என ஒலித்தனர். மூன்று பெரிய ஆகாய விமானங்கள் தாழ்ந்து பறந்து ரோஜா மலரிதழ்களை மழையெனச் சொரிந்தன. பல்லாயிரக் கணக்கான தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை வீரர்கள் சீருடையில் முன்னும் பின்னும் சென்றனர்.

## தகனக் கிரியை

யமுனு நதிக்கரையில் ருஜ்கட் என்னும் இடத்தில் சந்தனக் கட்டைகளின் மேல் மகாத்மாவின் உடலம் வைக்கப்பட்டது. நெருங்கிய தொடர்புள்ளவர்கள், உறவினர் சிதைக்கு அண்மையில் நின்றனர்.

மகாத்மாவின் மைந்தருள் ஒருவரான ரும்தாஸ்காந்தி தீமூட்டிக் கடன்கள் செய்தார். காந்தியின் அஸ்தி நாடெங்கும் புனித நீரில் கலக்கப் பெற்றது. அயல் நாடுகளிலும் அவரின் அஸ்தி கலக்கப் பெற்றது. இலங்கைக்குக் கிடைத்த அஸ்தியில் ஒரு பகுதி யாழ்ப்பாணத்தில் கீரிமலையில் பல்லாயிரம் மக்கள் மத்தியில், ''ரகுபதிராகவராஜாராம்'' பாடல் ஒலிப்பக் கரைக்கப் பெற்றது.

காந்தியடிகளின் அஸ்தியின் பெரும்பகுதி அலகபாத் நகரில், கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய புனித நதிகள் சங்கமிக்கும் இடத்திலே கரைக்கப் பெற்றது.

## நான் மறைந்த பின்

''நான் மறைந்த பின் தனிப்பட்ட எவராலும் என்னுடைய இடத்தை நிரப்பிவிட முடியாது. ஆனுல் உங்கள் எல்லோரிடத்தும் என்னுடைய அம்சம் சிறிது சிறிதாக நிலவும். எனவே நீங்கள் எல்லோரும் முதலில் நாட்டின் நலத்தை முதலிலும் அதன்பின் உங்கள் நலத்தையும் நாடி உழைத்தால் என்னுடைய வெற்றிடம் பெருமளவில் நிரப்பப்படும்.'' இது காந்தியடிகள் இறுதியாகக் கூறிய வாசகம்.

## ஓலைச் சார்வுகள் தருவீர்களா?

நாங்கள் கண்டி, கம்பளை, மாத்தளை, நுவரெலியா முதலிய நகரங்களிலுள்ள பாடசாலைகளுக்கும் அரிவரி ஏடுகள் அன்பளிப்புச் செய்கிறோம். பனை வளம் உள்ள வரண்ட பிரதேசத்தவர் எமக்குத் தேவையான ஓலைச் சார்வுகள் வரையாது தந்துதவினுல் உங்கள் பெயரால் ஏடுகளை அன்பளிப்புச் செய்ய வாய்ப்பாகும்.


**மில்க்வைற் செய்தி**

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள்.
நாங்கள் தபாற்செலவு கட்டி செய்தியை அனுப்புவோம்.

**நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2**
**பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2**
**சலவைப் பவுடர் மேலுறை 2.**
**மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.**



## ஔவை அருந்தமிழ்

★

சேர நாட்டைப் பொன் நாடு என்று வாழ்த்தியமை

ஔவையார் அங்கவை, சங்கவை என்னும் சிறுமியர் இருவரை அன்போடு வளர்த்து வந்தார். பிள்ளைகள் பால் பருகி நல்ல உடம்பினராய் வளர்தல் வேண்டும் எனக் கருதிய ஔவையார் சேர மன்னனிடம் ஓர் ஆடு தரும்படி கேட்டார். சேரன் ஔவையாரின் மனம் மகிழும் வண்ணம் பொன்னாலான ஆடு ஒன்றைப் பரிசாக அளித்தான். ஔவையார் தாம் கேட்டதொன்று, அரசன் கொடுத்ததொன்று என்று கூறிப் புன்முறுவல் பூத்து ஒரு பாட்டுப் பாடினார்.

''சிரப்பால் மணிமவுலிச் சேரமான் தன்னைச்
சுரப்பாடு யான் கேட்கப் பொன் ஆடொன்றீந்தான்
இரப்பவர் என்பெறினும் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவார் தம் கொடையின் சீர்.''

பாட்டைக் கேட்டு மகிழ்ந்த சேர மன்னன் ஔவையார் மனங்களிக்கும் வகையில் நல்ல இனத்துப் பால் ஆடு ஒன்றைக் கொடுத்தான். ஔவையார் மகிழ்ந்து ''சேரா உன் நாடு பொன் நாடு'' என்று வாழ்த்தினார். அது உன் ஆடு பொன்னாடு என்றும் பொருள் பொதிந்தது.

## அடுக்குமொழி அகராதி

வாட்ட சாட்டம்
வாட்டி வதக்குதல்
வாடி உலர்ந்த
வாடி வதங்கி
வாது வம்பு
வாய்க்கால் வரம்பு
வாய்ப்பு வசதி
வாய்மையும் தவமும்
வாய்மையும் தூய்மையும்
வாயிலும் வயிற்றிலும்
வாயும் வயிறும்
வாயுவேகம் மனோவேகம்
வாழ்த்தி வணங்கி
வாழ்வு தாழ்வு

## ஒவ்வொன்றிலும் மிகப் பெரியவை

| | | | |
|---|---|---|---|
| 1. | தீவு | — | கிறீன்லந்து |
| 2. | ஆறு | — | மிசூரி மிசிசிப்பி |
| 3. | பாலைவனம் | — | சகாரா |
| 4. | சமுத்திரம் | — | பசுபிக் |
| 5. | பட்டணம் | — | ரோக்கியோ |
| 6. | நீர் வீழ்ச்சி | — | கொன்கற்றூக்ஸ் |
| 7. | குடைந்த குகை | — | சிம்ப் லொன் |
| 8. | ஏரி | — | கஸ்பியன் கடல் |

## நவீன உலக அதிசயங்களில் ஒன்று

பழைய காலத்து அதிசயங்களில் சீனப் பெருமதில், எகிப்திய பிரமிட் கோபுரம், பாபிலோனிய தொங்கு தோட்டம் முதலியவற்றைக் குறிப்பர். நவீன அதிசயங்களில் ஒன்று அமெரிக்க நாட்டு நியூயோக் நகரத்து எம்பயர் ஸ்ரேற் கட்டடம். அது 102 மாடிகளுடன் அமைந்து 80,000 மக்கள் தங்கக் கூடியதாகும்.

## ஆங்காங்கே உயர்ந்த மலைச் சிகரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | இங்கிலாந்து | — | ஸ்கபெல்பைக் |
| 2. | ஸ்கொத்துலாந்து | — | பென்நெவிஸ் |
| 3. | உவேல்ஸ் | — | ஸ்நோடன் |
| 4. | ஐரோப்பா | — | எல்புறுஸ் |
| 5. | வட அமெரிக்கா | — | மக்கின்லி |
| 6. | தென் அமெரிக்கா | — | அகன்காகுவா |
| 7. | ஆசியா | — | எவெறெஸ்ற் |
| 8. | ஆபிரிக்கா | — | கிளிமஞ்சரோ |
| 9. | அவுஸ்திரேலியா | — | கொஸ்கியுஸ்கோ |
| 10. | நியூசிலந்து | — | குக் |

## தீப்பெட்டி

நெருப்புப் பெட்டி என நாம் வழங்கும் இந்தச் சாதனம் வருமுன்னர் காய்ந்த தடிகள், கல்லோடு கல் முதலிய சாதனங்களால் கஷ்டப்பட்டு நெருப்பு மூட்டி அணைய விடாமல் பாதுகாத்து வந்தனர். ஒருவர் வீட்டிலிருந்து ஒரு பொறி எடுத்து வந்து மூட்டிக் கொள்வதும் வழக்கம்.

யோண் வாக்கர் என்பவர் ஸ்ரொக்கோம் நகரில் 1827ஆம் ஆண்டில் முதன் முதலாகத் தீப்பெட்டி செய்தார். பொட்டாசியம் குளோறேற், பிசின், சீனி முதலியன அவர் கையாண்ட மூலப் பொருள்களாகும். அவரைத் தொடர்ந்து 1831ஆம் ஆண்டில் பிரான்சியரான சாள்ஸ் சோரியா என்பவர் நல்ல முறையில் தீப்பெட்டிசெய்தார்.

சுவீடின் நாட்டினர் செய்த தீப்பெட்டிகளுக்கு ஒரு காலத்தில் உலகப் புகழ் கிடைத்தது. தீப்பெட்டிகளைத் திறமையாகச் செய்வதில் சீனர் சிறந்துள்ளனர். இன்று தமிழ் நாட்டில் சிவகாசி முதலிய இடங்களில் தீப்பெட்டி நல்ல முறையிற் செய்யப் பெறுகிறது. யாழ்ப்பாணத்தில் தீப் பெட்டி செய்வதில் ஊக்கம் வேண்டும்.

★ மகாவிஷ்ணுவின் மடியில் இருப்பவள் ★

## சி. வை. தாமோதரம்பிள்ளை

தமிழ்தந்த தாமோதரனார் எனச் சான்றோரால் போற்றப் பெற்ற சிறுப்பிட்டி வைரவநாதர் தாமோதரம் பிள்ளை அவர்கள் 12-9-1832இல் தோன்றியவர், வட்டுக் கோட்டை சாத்திர சாலையில் ஏழாண்டு பயின்று விற்பத்திமானானவர். சுன்னாகம் முத்துக்குமார கவிராசசேகரம் அவர்களின் உத்தம மாணாக்கராகித் தமிழை முறையாகக் கற்றவர். தம்மிலும் பத்தாண்டுகள் மூத்த ஆறுமுக நாவலர் அவர்களைத் தமக்கு வழிகாட்டியாகக் கொண்டு தமிழ்த் தொண்டு புரிந்தவர்.

கற்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய முப்பெரு நகரங்களில் 1857ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்கள் நிறுவப் பெற்றதும், சென்னையில் நடைபெற்ற B. A. தேர்வில் சித்திபெற்ற பட்டதாரிகள் இருவருட் சிறப்பிடம் பெற்றவர். யாழ்ப்பாணத்தாரின் அறிவாற்றல் பெருமையை உலகறியச் செய்தவர்.

வணக்கத்துக்குரிய பேர்சிவல் பாதிரியார் பத்திரிகைத் துறையில் புகுந்து ஆரம்பித்த தினவர்த்தமானி என்னும் வார வெளியீட்டின் பத்திராதிபராய், சென்னை இராசதானிக் கல்லூரிப் பேராசிரியராய், சென்னைப் பல்கலைக் கழகப் பரீட்சகராய், புதுக்கோட்டையில் நீதவானாய், வெள்ளைக்காரர் பலருக்குத் தமிழ்க் குருவாய், திருவாவடுதுறையாதீன மகா சந்நிதானம் மேலகரம் சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளின் அபிமானத்துக்குரியவராய், சென்னை மூதலாய தமிழ்நாட்டு நகரங்களின் தமிழ்ப் பெரியார்களின் உற்ற நண்பராய், பழைய ஏடுகளைத் தேடிப் பரிசோதித்து அவற்றை அச்சிட்டுத் தமிழ் அன்னையை அலங்கரித்த ஒப்பனையாளராய், இளைஞர் பலரைத் தமிழ்த் துறையில் ஊக்குவித்த வித்தகராய் வழிகாட்டியாய், கலங்கரை விளக்கமாய், பிறர் செய்த உதவிகளைக் கனவிலும் மறவாத செந்தமிழ்ச் சீலராய் வாழ்ந்து 1-1-1901 மறைந்த மகாமேதை அவர்.

தாமோதரம்பிள்ளை அவர்களின், நினைவாக அடுத்து வரும் 1983 தை மாதத்தில் முத்திரை வெளியிடப் பெறும் என நம்ப இடமுண்டு. அப்போதைக்கு இப்போதே அவர் பெருமையை மில்க்வைற் தொழிலதிபர் சொல்லிவைப்பதிற் பெருமைப்படுகிறார். பின்னர் விரிவான வரலாற்றுச் சுருக்கம் வெளியிட விரும்பியுள்ளார்.

## *Gandhisukti Muktavali*

**( A string of pearls from Gandhi )**

1. Differences of opinion should never mean hostility. If they did, my wife and I should be sworn enemies of one another.
2. My dreams are not airy nothings. I want to convert my dreams into realities as far as possible.
3. Truth to me is infinitely dearer than Mahatmaship, which is purely a burden.
4. I hold it to be a blasphemy to represent me as Shri Krishna.
5. I am concious of my limitations. That conciousness is my only strength.
6. My faith in God and His strength and love is unshakeable. I am like clay in the Poter's hands.
7. I wear the same corruptible flesh that the weakest of my fellow beings wears, and am, therefore as liable to err as any.
8. I am content with the doing of the task in front of me. I do not worry about the why and whereof of things.
9. I worship God as Truth only. I have not yet found Him, but I am seeking after Him.
10. Truth resides in every human heart and one has to search for it there, and to be guided by truth as one sees it.
11. I am a learner myself, I have no axe to grind, and whereever I see truth, I take it up and try to act up to it.
12. I believe that we can all become messengers of God, if we cease to fear man and seek only God's Truth and have lost all fear of man.

## இவை எங்கே அதிகமாக உள்ளன?

| | | | |
|---|---|---|---|
| 1. | நிலக்கரி | — | அமெரிக்கா, றஷ்யா, பிரித்தானியா. |
| 2. | பொன் | — | தென்ஆபிரிக்கா, றஷ்யா, அமெரிக்கா. |
| 3. | தகரம் | — | மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து. |
| 4. | பெற்றோலியம் | — | அமெரிக்கா, வெனிசூலா, றஷ்யா. |
| 5. | பாதரசம் | — | இத்தாலி, ஸ்பெயின், அமெரிக்கா. |
| 6. | செம்பு | — | அமெரிக்கா, றோடேசியா, கனடா. |
| 7. | வெள்ளி | — | மெக்சிக்கோ, அமெரிக்கா, கனடா. |
| 8. | இரும்பு | — | அமெரிக்கா, றஷ்யா, பிறான்ஸ். |
| 9. | ஈயம் | — | அமெரிக்கா, மெக்சிக்கோ, அவுஸ்திரியா. |
| 10. | நிக்கல் | — | கனடா, றஷ்யா, கலிடோனியா. |

வீட்டில் பூசையறையில் மங்களகரமாகப் படங்களின் நடுவில் நாயகியாக இருப்பவள் லக்ஷ்மி. லக்ஷ்மி படத்துக்கு முன் குத்துவிளக்கேற்றிப் பூசை செய்து வந்தால், புத்திர சந்தானம், பசு, தனம், தானியம், திரவியம், நல்ல நண்பர்களின் உறவு எல்லாம் கிடைக்கும்.

**★ மங்களகரமானவள், மங்களத்தைத் தருபவள் ★**



## சிவத்தமிழ்ச் செல்விக்குப் பட்டம் சமாதான நீதிபதி

துர்க்கையம்மன் கோயில் நிர்வாக சபைத் தலைவர் தொண்டு பெரிது எனக் கண்டு அரசாங்கம் அவருக்குச் சமாதான நீதிபதிப் பட்டம் வழங்கியுள்ளது. ஜே. பி. பட்டம் பெற்ற பெண்மணிகளுள் செல்வி தங்கம்மா அவர்கள் புகழ் பெரிது. அவர் பணி வளர்வதாக.

## நல்லூர்த் தொகுதி கல்விவள நிலையம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்றுள்ள நல்லூர்த் தொகுதி கல்விவள நிலையம் நல்ல முறையில் மாணுக்கர் மாணுக்கியருக்குப் படிப்பு வசதி, படக்காட்சி வசதியளிக்கத் தொடங்கியுள்ளது. தொடக்க விழாவில் மில்க்வைற் தொழிலதிபரும் பாரியாரும் விருந்தினராய்ப் பங்குபற்றி உபகரிப்புச் செய்துள்ளார்கள்.

## சனுதிபதி பரிசு

சனுதிபதி பரிசு பத்தாயிரம் ரூபா என்ருல் பெருமை தானே, இசையுலகில் புகழ் பெற்று வரும் அளவெட்டியூர் பத்மநாதன் ஜே. பி. அவர்கள் பெரும் பரிசு பெற்றுப் பெருமையடைந்துள்ளார். அவருக்கு எங்கள் பாராட்டு.

## நால்வர் படம் அன்பளிப்பு

வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலைப் பிரார்த்தனைக்கான நால்வர் படத்தைத் திருமுறைக் கழகத்தார் வழங்கிய போது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மில்க்வைற் தொழிலதிபர் சைவ முன்னேற்றம் பற்றிப் பேசித் தம் இலவச வெளியீடுகளை வழங்கினுர்.

மனத்தால் நினைக்கவும், வாக்கால் வருணிக்கவும் முடியாத பரப்பிரம்ப சொருபிணியான மகாலட்சுமியின் புன்சிரிப்பால் அடையக்கூடிய செல்வப் பெருக்கு அதிகம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**பனையன்பர்......**

பனையைத் தறிக்காமல் பயனைப்பெறப் பழகியவர். அஹிம்சா முறையில் அபிவிருத்திப்பாதை அமைத்தவர்.

முன்னர் இலங்கையில் அரசியற் பரிபாலனத்துறையிலமர்ந்திருந்த எமர்சன் ரெனன்ற் எழுதிய 801 பனைப் பிரயோசனங்களை 1000 வகையாக்க வல்லவர் சம்பந்தர் அவர்கள்.

பொதுநலவாய நாடுகளின் அரசமைப்பில் வந்த கொழும்புத்திட்டத்தின் வண்ணம், நாடுகள் கொண்டும் கொடுத்தும் மகிழ்ந்து பழகும் வகை ஒருபுறம். மற்ருெரு வழியில் ஐக்கிய நாடுகளின் உணவு விவசாயப் பகுதி ஆதரவு முறையிலும் சம்பந்தம் அவர்களுக்கு உலகப் புகழும் மதிப்பும் பரவலாக உண்டு.

''சம்பந்தரை அழையுங்கள், அழைத்து ஆலோசனை பெறுங்கள்'' என்று பனைச்சபையினருக்குப் பலமுறை எடுத்துரைத்து வழிகாட்டியவர் மில்க்வைற் தொழிலதிபர். அரசாங்கத்தின் விருந்தினராக வருகைபுரிந்த சம்பந்தம் அவர்களிடம் தமிழ்நாட்டுப் பனையபிவிருத்திப் பொறுப்பு உண்டு. தமிழ்நாட்டு அரசாங்கம் அவரிடம் ஒரு கோடி ரூபாவைக் கொடுத்து ஏக்கர் தோறும் 500 பனம் விதைகள் நடுவதற்குத் திட்டமிட்டுள்ளது. அங்கே ஐந்து கோடி பனை போதாது என்று இன்னும் அபிவிருத்தி செய்கிருர்கள். நாங்கள் பனையபிவிருத்திப் பணியில் விட்டுக்கொடுத்தலாகாது. வருடந்தோறும் பல்லாயிரம் பனைகள் உண்டாதல் வேண்டும். வடலி வளம் பெருகினுல் தும்பு வளம் சிறக்கும்.

**பனையை வளர்த்துப் பயனைப் பெறுவோம்.**

## மூவேந்தர் கிராமாபிவிருத்திச் சங்கம்

வவுனிக்குளத்தில் யோகபுரத்தில் ஆரும் பகுதியில் அரசாங்க அதிபர், தொழிலதிபர், கிராமசேவையாளர், மகாவித்தியாலய அதிபர்கள், கிராமமுன்னேற்றச் சங்கத்தார், மாதர் சங்கத்தார் இன்னும் பலர் சேர்ந்து சிரமதான முறையில் ஒரு கட்டடம் எழுப்ப முன்வந்துள்ளார்கள். கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் பணியை மில்க்வைற் தொழிலதிபர் 29-9-82 புதன்கிழமை நண்பகல் மங்கலகரமாகச் செய்து வைத்துள்ளார்.

## இங்கிலாந்திற் சைவசமயம்

உலகப்புகழ்பெற்ற சீமை என்னும் லண்டன் மாநகரில் சைவசமயம் வெகுவாகப் பரவி வருகிறது. அங்கு வாழும் சைவாபிமானிகள் காலந்தோறும் சைவசமயப் பண்டிகைகள், விழாக்கள் முதலியனவற்றைப் பயபக்தியோடு கொண்டாடி வருகிருர்கள். கூட்டு வழிபாடு செய்கிருர்கள்.

செய்ய முடியாததெனத் தோன்றுவது எப்போதும் உண்மையில் அப்படிப்பட்டதல்ல.

— மகாத்மா காந்தி

★ **மூவுலகங்களுக்கும் நன்மையைத் தருபவள்** ★




மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகள்
காசுத்தாள்கள்போல் பெறுமதிவாய்ந்தவை.
அவற்றைச் சேகரித்துப் பெறுமதிவாய்ந்த
பொருள்களை வெகுமதியாகப் பெறுங்கள்:

- ★ பெரிய கட்டில் விரிப்பு
- ★ அழகிய துவாய்
- ★ அழகிய பொலித்தீன் பை
- ★ காந்தி படமுள்ள கதர் பை
- ★ காந்தியின் சிலை
- ★ பாரதியாரின் சிலை
- ★ அறிவு நூல்கள்
- ★ நீதி நூற்கொத்து
- ★ ஆத்திசூடி ஆங்கில உரை
- ★ கொன்றை வேந்தன் ஆங்கில உரை
- ★ சுவாமிப் படங்கள்
- ★ நால்வர் படங்கள்
- ★ பெரியவர்களின் படங்கள்
- ★ அப்பியாசக் கொப்பிகள்
- ★ நீதிக் குரங்குப் பொம்மை
- ★ பனையோலைத் தொப்பி
- ★ யோகாசனப் புத்தகங்கள்,
- ★ யோகாசன விளக்கப் படங்கள்

**மில்க்வைற் தயாரிப்புகளுக்கு
நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின்
நற்பணிக்கே உதவுகிறது.**


முற்றொடர்:-

## தொகையகராதி

— நான்கு —

தேவ கணிகையர்

மேனகை ஊர்வசி
அரம்பை திலோத்தமை

தேவர்கள்

பவனர் சோதிடர்
வியந்தரர் கற்ப வாசிகள்

தோற்றம்

கருப்பை நிலம்
முட்டை வியர்வை

நிலம்

குறிஞ்சி மருதம்
முல்லை நெய்தல்

நீல மணிச் சாதி

வெள்ளை சிவப்பு
பச்சை கருமை

நூல்யாப்பு

தொகுத்தல் தொகைவிரி
விரித்தல் மொழி பெயர்ப்பு

## பனையன்பர் சம்பந்தம்

தமிழ் நாட்டிலிருந்து பனையபிவிருத்திக்கான ஆலோசனைகள் சொல்லவும் வழிகாட்டவும் வருகை புரிந்த திரு. கே. சம்பந்தம் அவர்கள், தனிப்பட்ட முறையில் ஈழத்துப் பனையன்பர் மில்க்வைற் தொழிலதிபரைக் கண்டு, பனை வளங்களைப் பார்வையிட்டும், பனை வளம் பெருக்கிய பண்பாளர்களைக் கண்டு உரையாடியும் மகிழ்ந்தார். தமிழ் நாட்டில் பனம் விதைகளைத் தாங்கள் பணம் கொடுத்து வாங்குவதாகவும், இங்கே அபிமானிகள் இலவசமாகக் கொடுக்கிறதாகவும் நிலவும் நிலைமையைக் குறிப்பிட்டு யாழ்ப்பாணத்தவரைப் பாராட்டினார். இவர் தற்சமயம் தமிழ் நாட்டில் ஒரு கோடி ரூபா ஒதுக்கப் பெற்றுப் பனை வளம் பெருக்கி வருகிறார் என்றால் தமிழ் நாடு இவர் மீது கொண்டுள்ள நம்பிக்கையை என்னென்பது.

## அமங்கலத்தைக் குறிக்கும் மங்கலச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நெடுந் துயில் | — | மரணம் |
| 2. | காலை நீட்டினார் | — | மரணமானார் |
| 3. | பரலோகமுற்றார் | — | ,, |
| 4. | சோற்றை மறந்தார் | — | ,, |
| 5. | இறைவனடி சேர்ந்தார் | — | ,, |
| 6. | காலமாயினார் | — | ,, |
| 7. | மங்கள வாரம் | — | செவ்வாய்க்கிழமை |
| 8. | நடுவன் | — | இயமன் |
| 9. | பெரியவள் | — | மூதேவி |
| 10. | ஏழரை நாட்டான் | — | சனியன் |
| 11. | மஞ்சள் குங்குமம் நீத்தாள் | — | கைம்பெண்ணாயினாள் |
| 12. | மெத்தவாயிருக்கிறது | — | ஒன்றும் இல்லை |

## நிலக்கடலை

இலங்கையில் வசதியும் வாய்ப்பும் உள்ள இடங்களில் நிலக்கடலையைப் பரவலாகப் பயிரிடவேண்டும் என்று விவசாயப் பெருங்குடி நண்பர்களைப் பெரிதும் வேண்டி நிலக்கடலை என்னும் சிறிய கைநூலை வெளியிட்டுள்ளோம். தேவையானோர் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்,
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1–10–82.